பக்கங்கள்:-17

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | மாசி 10 | வெள்ளிக்கிழமை | 23.02.2024 | அதிர்வு 206

## கச்சதீவு திருவிழா இன்று ஆரம்பம்



(ந.லோகதயாளன்)

கச்சதீவு புனித அந்தோனியார் 06



## சிறீதரன் எம்.பியை நேரில் அழைத்து பேசிய இந்தியத் தூதர் சந்தோஷ் ஜா

### முக்கிய விடயங்கள் தொடர்பில் கலந்தாய்வு

(எஸ்.நிதர்ஷன்)

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா, இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனை நேரில் அழைத்துப் பேசினார்.

இந்தச் சந்திப்பு கொழும்பில் உள்ள இந்தியன் இல்லத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது என்று சிறீதரனின் எம்.பியின் ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

“தமிழரசுக் கட்சியின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டமைக்காகச் சிறீதரன் எம்.பிக்கு வாழ்த்துத் தெரிவித்த இந்தியத் தூதுவர், கட்சியின் அடுத்தகட்ட 06

# நாட்டு மக்கள் விரும்பும் ஒரே தலைவர் ரணிலே!

## அமைச்சர் ஹரின் புகழாரம் சஜித் அணிக்கும் அழைப்பு


**நாட்டிலுள்ள சகல மக்களும் விரும்புகின்ற ஒரே தலைவராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க திகழ்கின்றார் என்று அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார்.**

**எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ரணிலின் வெற்றி, இலங்கை அரசியல் வரலாற்றில் பெரும் சாதனையாகப் பதியப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.** 06



## புளொட் அமைப்பின் முக்கியஸ்தர் ஆர். ஆர். நேற்றுக் காலமானார்!

(எஸ்.நிதர்ஷன்)



புளொட் அமைப்பின் சிரேஷ்ட உப தலைவரும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் செயலாளருமான ஆர்.ஆர். என அழைக்கப்படும் வேலாயுதம் நல்லநாதர் (இராகவன்) நேற்று காலமானார்.

புளொட் அமைப்பின் மூத்த போராளியான ஆர். ஆர். 1980 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை தனது வாழ்வின் பெரும் பகுதியை தமிழ் மக்களின் விடுதலைக்கான பயணத்தில் 06



இலங்கைத் தமிழரசுக் கட்சியில் ஏற்பட்டுள்ள நெருக்கடி தொடர்பாக ஆராய்வதற்கான கூட்டம் ஒன்று, கிளிநொச்சியில் இன்று காலை 10 மணிக்கு நடைபெறுகின்றது.

பழைய மத்திய குழுவின் கூட்டத்தைத்தான் இன்று கூட்டுவதாக இருந்தது. அப்படிப் பழைய மத்திய குழுவை உத்தியோகபூர்வமாகக் கூட்டுவது, தற்போதைய சட்ட நெருக்கடிகளை மேலும் பாதிப்படைய வைக்கலாம் 06

# இரவு நேரப் பொருளாதாரத்திற்கு மாறுவதன் மூலம் நாட்டின் அந்நியச் செலாவணியை அதிகரிக்கலாம்

## சுற்றுலாத்துறை இராஜாங்க அமைச்சர் டயனா கமகே தெரிவிப்பு



"இரவு நேரப் பொருளாதாரத்திற்கு மாறுவதன் மூலம் நாட்டின் அந்நிய செலாவணியை சுமார் 70 வீதம் வரை அதிகரிக்க முடியும்.

அதற்காக சுற்றுலாப் பயணிகளை அதிகம் கவரக் கூடிய இடங்கள் தொடர்பாக தற்போதுள்ள சட்டங்களையும் ஒழுங்கு முறைகளையும் திருத்தியமைத்து, தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்."

– இவ்வாறு சுற்றுலாத்துறை இராஜாங்க அமைச்சர் டயனா கமகே தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக வியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

"ஒரு நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்துவதில் இரவு நேரங்களில் பல்வேறு பொழுதுபோக்கு நடவடிக்கைகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. சுற்றுலாப் பயணிகளுக்கான பொழுதுபோக்கு நடவடிக்கைகள் மற்றும் இரவில் உணவகங்களைத் திறந்து வைப்பது உள்ளிட்ட இரவு நேரப் பொருளாதாரத்தை நாடுவதன் மூலம் நாட்டின் அந்நிய செலாவணியை சுமார் 70 வீதம் அதிகரிக்க முடியும். உலகின் பல நாடுகள் பொருளாதார வளர்ச்சிக்கு இரவு நேரப் பொருளாதாரத்தின் பங்களிப்பை பயன்படுத்திக் கொள்கின்றன.

வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் மட்டுமின்றி, நம் நாட்டு மக்களும் இரவு நேரங்களில் உணவகங்களுக்குச் செல்வது உள்ளிட்ட பல்வேறு கேளிக்கைகளில் ஈடுபடுவதையே விரும்புவது வழக்கம். இதன்மூலம் விசேடமாக மதுவரி வருமானத்தையும் அதிகரிக்க அரசாங்கத்திற்கு வாய்ப்பளிக்கிறது. ஒரு நாட்டை முன்னோக்கி நகர்த்துவதற்கும், நாட்டின் நிலையான வளர்ச்சியைப் பேணுவதற்கும், அரச வருமானத்தை அதிகரிப்பது அவசியம்.

இரவு நேரப் பொருளாதாரம் தொடர்பில் சில தரப்பினர் பல்வேறு குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றனர். ஆனால் இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு பொழுதுபோக்கிற்கான வாய்ப்புகள் இருக்க வேண்டும். குறிப்பாக கடலோரப் பகுதிகளிலும், கொழும்பு போன்ற நகர்ப்புறப் பகுதிகளிலும் முக்கிய சுற்றுலாத் தலங்கள் உள்ளன. எனவே, இதுபோன்ற இடங்கள் தொடர்பான சட்ட, விதிமுறைகளை திருத்தம் செய்து, தேவையான வசதிகளை செய்து தர வேண்டும்.

இங்கிலாந்து, பிரான்ஸ், ஜெர்மனி உள்ளிட்ட பல்வேறு நாடுகளில் இருந்து இந்த நாட்டிற்கு சுற்றுலாப் பயணிகள் வருகின்றனர். அவர்கள் இந்த நாட்டிற்கு வந்து பொழுதுபோக்கக்கூடிய வகையில் தற்போதுள்ள சில கட்டுப்பாடுகள் திருத்தப்பட வேண்டும். உதாரணமாக, உணவகங்கள் திறக்கும் நேரத்தை மாற்ற வேண்டும். சுற்றுலாப் பயணிகளுக்கு வசதியான ஒரு நெகிழ்வான கொள்கைக்கு நாம் செல்ல வேண்டும்." – என்றார்.

# கந்தளாயில் நேற்று விபத்து; பெண் பலி 7 பேர் படுகாயம்



(அப்துல்சலாம் யாசீம்)

கந்தளாய் – அழுத்ஓயா பிரதேசத்தில் நேற்று மாலை இடம்பெற்ற வாகன விபத்தில் பெண்ணொருவர் உயிரிழந்துள்ளமையுடன் ஏழு பேர் படுகாயமடைந்த நிலையில் கந்தளாய் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

உயிரிழந்த பெண் கிண்ணியா பகுதியைச் சேர்ந்த 37 வயதுடையவர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து கிண்ணியா நோக்கி வந்து கொண்டிருந்த வான் எதிர் திசையில் மணல் ஏற்றிக்கொண்டு வந்த லொறியுடன் மோதியதிலேயே இவ் விபத்து இடம்பெற்றுள்ளதாகவும் கல்ஓயா பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்விபத்தின் போது காயமடைந்தவர்கள் கந்தளாய் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். உயிரிழந்த பெண்ணின் சடலம் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகின்றது.

வானின் சாரதிக்கு ஏற்பட்ட தூக்கமே விபத்துக்கு காரணம் எனவும் பொலிஸ் ஆரம்ப கட்ட விசாரணை மூலம் தெரிய வந்துள்ளது.

விபத்து தொடர்பிலான விசாரணைகளை ஹதரஸ் கொடுவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# வவுனியாப் பல்கலை துணைவேந்தர் பதவிக்கு நான்கு பேராசிரியர்கள் விண்ணப்பித்துள்ளனர்

## அவர்களில் ஒருவர் பெரும்பான்மை இனத்தவர்




வவுனியாப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பதவிக்குப் பெரும்பான்மை இனப் பேராசிரியர் உட்பட நால்வர் விண்ணப்பம்!

வவுனியாப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பதவிக்கு பெரும்பான்மை இனப் பேராசிரியர் ஒருவர் உட்பட நான்கு பேரின் விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன என அறிய வருகிறது.

தற்போதைய துணைவேந்தர் பேராசிரியர் தம்பு மங்களேஸ்வரனின் பதவிக் காலம் எதிர்வரும் ஜூலை 13 ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ள நிலையில், அந்தப் பல்கலைக்கழகத்தின் பேரவைச் செயலாளரால் புதிய துணைவேந்தர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன. அதற்கான இறுதித் தினம் நேற்று முன்தினம் 21 ஆம் திகதி புதன்கிழமையாகும்.

நேற்று முன்தினம் பிற்பகல் 3:00 மணியுடன் துணைவேந்தர் பதவிக்கான விண்ணப்பங் கோரல் நிறைவடைந்த வேளையில் வவுனியாப் பல்கலைக் கழகப் பேராசிரியர்கள் இருவரும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழப் பேராசிரியர் ஒருவரும், ருகுண மற்றும் ரஜரட்ட பல்கலைக் கழகங்களில் பணியாற்றிய பெரும்பான்மை இனப் பேராசிரியர் ஒருவருமாக நான்கு பேர் துணைவேந்தர் பதவிக்காக விண்ணப்பித்திருக்கின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் 24 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ள பல்கலைக்கழகப் பேரவையின் மாதாந்தக் கூட்டத்தில் பேரவையின் பதவிவழிச் செயலாளரான பதிவாளரால் நால்வரது விண்ணப்பங்களும் சமர்ப்பிக்கப்படவுள்ளன.

பேரவை விண்ணப்பங்களை ஆராய்ந்த பின்னர் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கைக்கு அமைய விசேட பேரவைக் கூட்டத்துக்கான திகதியைத் தீர்மானிக்கும். அன்றைய விசேட பேரவைக் கூட்டத்தில் தெரிவுக்கான புள்ளிகள் வழங்கப்பட்டு, புள்ளிகளின் அடிப்படையில் முதல் மூன்று இடங்களைப் பெறுபவர்களின் விவரங்கள் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு, கல்வி அமைச்சு ஆகியவற்றினூடாக ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்படும்.

பல்கலைக் கழகச் சட்டத்தின் படி ஜனாதிபதிக்குள்ள அதிகாரத்தின் அடிப்படையில், பேரவையினால் முன்மொழியப்பட்ட மூவரில் இருந்து ஒருவரைத் துணைவேந்தராக ஜனாதிபதி தெரிவு செய்து, நியமனம் செய்வார்.

# தென்னங்கோம்பைகளை ஏற்றி வந்த பட்டா கட்டுப்பாட்டை இழந்து விபத்து

## சாவகச்சேரி நுணாவிலில் சம்பவம்



தென்னங்கோம்பைகளை ஏற்றி வந்த பட்டா ரக வாகனம் ஒன்று கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி மதிலை உடைத்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த சம்பவம் யாழ்.சாவகச்சேரி நுணாவில் ஏ 9 வீதியில் நேற்றுப் பிற்பகல் 3.00 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் வாகனத்தின் சாரதி காயமடைந்துள்ளார்.

சாவகச்சேரியிலிருந்து தென்னங்கோம்பைகளை ஏற்றிக் கொண்டு யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த பட்டா வாகனமே இவ்வாறு விபத்துக்குள்ளானது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.




# இலங்கை வர அனுமதிக்கப்படாத சீன ஆய்வுக் கப்பல் மாலைதீவில்!

இலங்கை கடலில் பிரத்தியேகமாக பொருளாதார வலயத்திற்குள் நுழைய அனுமதி மறுக்கப்பட்ட சீன ஆய்வுக் கப்பல் நேற்று மாலைதீவைச் சென்றடைந்தது.

இலங்கை வலய எல்லைக்குள் ஆய்வு அல்லது கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டதன் பின்னரே சீன ஆய்வுக் கப்பல் மாலைதீவைச் சென்றடைந்தது.

இலங்கை நேரப்படி நேற்று மாலை 3.30 மணியளவில் சியாங் யாங் ஹொங் 3 கப்பல் மாலைதீவின் மாலே நகருக்கு அண்மையிலுள்ள கடலில் நங்கூரமிட்டுள்ளது.

இலங்கைக்கு அண்மையிலுள்ள பொருளாதார வலய எல்லையில் ஒரு மாத காலம் தங்கியிருந்து குறித்த கப்பல் மாலைதீவு நோக்கி நேற்றுப் பயணத்தை ஆரம்பித்தது.

இந்த நிலையில், மாலைதீவின் கடல் வலயத்தினுள் நேற்று அதிகாலை அக்கப்பல் பிரவேசித்துள்ளது.

சியாங் யாங் ஹொங் 3 சீன ஆய்வுக் கப்பலினால் இலங்கை தொடர்பில் இந்தியா மற்றும் சீனாவிற்கு இடையில் இடம்பெற்ற இராஜதந்திர கலந்துரையாடலில் புதிய திருப்பம் ஏற்பட்டுள்ளது.

தொடர்ச்சியாக சீன ஆய்வுக் கப்பல், இலங்கைக் கடற்பரப்பிற்குள் வருகை தருவது தமது பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் என இந்தியா, இலங்கை மீது அழுத்தம் விடுத்ததுடன், சீன கப்பல் இரட்டை நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகவும் குறிப்பிட்டது.

இவர்கள் சேகரிக்கும் தரவுகள் நீர்மூழ்கிக் கப்பல்களை செயற்படுத்தல் உள்ளிட்ட இராணுவ நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்படுவதாகவும் இந்தியா குற்றஞ்சாட்டியது.

இந்த பின்புலத்திலேயே அனைத்து நாடுகளின் ஆய்வுக் கப்பல்களும் இலங்கை கடற்பரப்பில் ஆய்வுகளை மேற்கொள்ள இலங்கை அரசாங்கம் தடை விதித்திருந்தது.

எனினும், இலங்கை குறித்த தடையை விதிக்கும் போதும், சீன அரசாங்கம் சியாங் யாங் ஹொங் 3 என்ற ஆய்வுக் கப்பலை இலங்கை கடற்பரப்பில் ஆய்வு நடவடிக்கைகளுக்காக அனுப்ப எழுத்து மூலம் அனுமதி கோரியிருந்தது.

இதற்கு கப்பல் தயாராக இருந்த நிலையிலேயே இந்தத் தடை விதிக்கப்பட்டது.

இதனடிப்படையில், சீனாவில் இலிருந்து கடந்த மாதம் 16ஆம் திகதி இந்து சமுத்திரத்தை நோக்கி புறப்பட்ட சீன கப்பல், இலங்கைக்கு பதிலாக மாலைதீவைத் தனது பயண இலக்காகத் தெரிவு செய்திருந்தது.

கடந்த 8 ஆம் திகதி மாலைதீவைச் சென்றடைவதாக அறிவித்திருந்த போதிலும், அவர்கள் தொடர்ச்சியாக இலங்கை கடல் எல்லைக்கு அண்மித்த பகுதியில் ஆய்வு அல்லது கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தனர்.

இலங்கையின் தெற்கு கடற்கரையிலிருந்து 200 கடல் மைல் தொலைவில் உள்ள பகுதி இலங்கையின் பிரத்தியேக பொருளாதார வலயம் என்பதுடன், சியாங் யாங் ஹொங் 3

அந்த எல்லையைச் சுற்றிச்சென்று ஆய்வு நடவடிக்கையில் ஈடுபட்டது.

இலங்கை, சீன கப்பலுக்கு அனுமதி மறுத்த நிலையில், கடந்த 3 ஆம் திகதி இந்தியாவின் நீர்மூழ்கிக் கப்பல் கொழும்பை வந்தடைந்தமையுடன் கடற்படை மரியாதையின் மத்தியில் வரவேற்கப்பட்டமை இந்தியாவின் வெற்றி என இந்திய ஊடகம் தெரிவித்திருந்தது.

இலங்கை மீதான இந்தியாவின் அழுத்தம் வெற்றியல்ல, இந்தியாவுக்கு வெட்கக்கேடானது என்று சீன ஊடகம் இதற்குப் பதிலளித்துள்ளது.

இதனிடையே, சியாங் யாங் ஹொங் 3கப்பல் தமது கடல் எல்லையில் எவ்வித ஆய்வுகளிலும் ஈடுபடவில்லை என்பதுடன், விநியோக நடவடிக்கைக்காக வருகை தந்துள்ளதாக மாலைதீவு அறிவித்துள்ளது.

# இரசாயன கலவைகள் அடங்கிய அழகுசாதனப் பொருள்கள் மீட்பு

புறக்கோட்டை இரண்டாம் குறுக்கு வீதி பகுதியில் உள்ள 4 வர்த்தக நிலையங்களில் மனித உடலை சேதப்படுத்தக் கூடிய இரசாயன கலவைகள் அடங்கிய அழகுசாதனப் பொருள்களை சோதனையிட்ட வளான மத்திய ஊழல் ஒழிப்பு பிரிவினர் அதன் உரிமையாளர்களையும் கைது செய்துள்ளனர்.

மேற்படி வர்த்தக நிலையங்களில் சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட அழகுசாதனப் பொருள்கள் மொத்த விற்பனையின் கீழ் விற்பனை செய்யப்படுகின்றன எனக் கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சோ-தனையின் போது அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அங்கு கைப்பற்றப்பட்ட ஆயிரத்துக்கு மேற்பட்ட



அழகுசாதனப் பொருள்கள் விசாரணைக்காக புறக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள் ளன.

இந்த அழகுசாதனப் பொருள்கள் பாகிஸ்தானில் தயாரிக்கப்பட்டவை என அச்சிடப்பட்டிருந்ததாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.





# பல்கலை கட்டமைப்பின் கீழ் தொழிற்பயிற்சி நிறுவனங்கள்

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதி

நவீன உலகிற்கு ஏற்றவாறு தொழில் கல்வியை மறுசீரமைத்து, இந்நாட்டின் இளைஞர் யுவதிகள் போட்டித்தன்மை நிறைந்த உலக தொழில் சந்தையில் வெற்றி பெறுவதற்கு உகந்த சூழல் உருவாக்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்தார்.

அதற்கமைய, நாட்டின் அனைத்துத் தொழிற்பயிற்சி நிறுவனங்களையும் ஒருங்கிணைத்து ஒரே பல்கலைக்கழக கட்டமைப்பின் கீழ் கொண்டு வருவதோடு, புதிய விடயப்பரப்புகளை உள்ளடக்கிய பாடநெறிகளை அறிமுகப்படுத்தத் திட்டமிட்டிருப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இரத்மலானை லலித் அத்துலத்முதலி தொழிற்பயிற்சி நிலையத்திற்கு நேற்று மேற்பார்வை விஜயமொன்றை மேற்கொண்டிருந்த போதே இதனைக் கூறினார்.

தற்போது டிஜிட்டல் மாற்றத்திற்கான முன்னெடுப்புகள் துரிதமாக இடம்பெற்று வருகின்றமையோடு, இதன்போது செயற்கை நுண்ணறிவு உள்ளிட்ட துறைகள் குறித்து விசேட கவனம் செலுத்தப்படும் எனவும், நாளாந்தம் மாற்றமடையும் தொழில்நுட்பத்துடன் முன்னேறிச் செல்ல வேண்டும் என்பதே இலங்கையின் எதிர்பார்ப்பு எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

பாடநெறிகள் நடத்தப்படும் வகுப்பறைகளுக்குச் சென்று மாணவர்களின் நலன்புரி மற்றும் பிற நலன் தொடர்பிலான விடயங்கள் குறித்து ஜனாதிபதி மாணவர்களுடன் சிநேகபூர்வமாக கலந்துரையாடினார். மாணவர்களின் கேள்விகளுக்கும் பதிலளித்தார்.

நவீன தொழில்நுட்பத்தின் வாயிலாக இலங்கையின் இளைஞர், யுவதிகள் முன்னோக்கிச் செல்ல காணப்படும் வாய்ப்புகள் குறித்து இளைஞர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த ஜனாதிபதி, தற்போது டிஜிட்டல் மாற்றத்திற்கான முன்னெடுப்புக்கள் துரிதமாக இடம்பெற்று வருகின்றன. இதன்போது செயற்கை நுண்ணறிவு உள்ளிட்ட துறைகள் குறித்து விசேட கவனம் செலுத்தப்படும் எனவும், நாளாந்தம் மாற்றமடையும் தொழில்நுட்பத்துடன் முன்னேறிச் செல்ல வேண்டும் என்பதே இலங்கையின் எதிர்பார்ப்பாகும் என்றும் தெரிவித்தார்.

முன்பள்ளி கற்கைநெறியை மேற்கொண்டு சொந்தமாக முன்பள்ளியொன்றை நடத்த எதிர்பார்கின்றேன் எனவும் அதற்கு ஒழுங்கான முறைமையொன்றை உருவாக்கித் தருமாறும் முன்பள்ளி கற்கைநெறியை கற்கும் மாணவியொருவர் விடுத்த கோரிக்கைக்குப் பதிலளித்த ஜனாதிபதி, முன்பள்ளி கல்வியை மேம்படுத்துவதற்கு அரசாங்கம் ஆரம்பித்துள்ள திட்டத்துடன் இணைந்ததாக இந்தக் கோரிக்கை தொடர்பில் கவனம் செலுத்தப்படும் என்று தெரிவித்தார்.

அதனையடுத்து தொழில் பயிற்சி நிலையத்தின் விசேட விருந்தினர்களுக்கான பதிவேட்டில் குறிப்பு இட்ட ஜனாதிபதி, மாணவர்களுடன் குழுப் புகைப்படம் எடுக்கும் நிகழ்விலும் கலந்துகொண்டார்.

பின்னர் மாணவர்களுடன் சிநேகபூர்வமாக கலந்துரையாடிய ஜனாதிபதி மாணவர்களின் செல்பி புகைப்படங்க-ளிலும் இணைந்துகொண்டார்.

விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் கே.மகேசன், தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் தலைவரும் பணிப்பாளருமான பசிந்து குணவர்தன, இளைஞர் மற்றும் நிலைபெறு அபிவிருத்தி தொடர்பான ஜனாதிபதியின் பணிப்பாளர் ரந்துல அபேவீர, லலித் அத்துலத் முதலி தொழில் பயிற்சி நிலையத்தில் ஆசிரியர்கள் குழாம், மாணவர்கள் உள்ளிட்ட பலரும் இதன்போது இணைந்து கொண்டிருந்தனர்.















# நாட்டின் சுற்றுலாத் துறைக்குத் தேவையான வாகனங்களை இறக்குமதி செய்யத் திட்டம்

சுற்றுலாத் துறையை ஊக்குவிப்பதற்கு தேவையான வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு அனுமதி கோரும் பிரேரணை அமைச்சரவையில் சமர்பிக்கப்பட்டுள்ளது.

சுற்றுலாத் துறை அமைச்சர் ஹறின் பெர்னாண்டோ இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, சுமார் ஆயிரம் வான்களையும் கார்களையும் இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுத்து வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

மேற்படி பிரேரணைக்கு அடுத்த அமைச்சரவை கூட்டத்தில் அனுமதி கிடைக்கப் பெறும் என எதிர்பார்க்கின்றேன் என சுற்றுலாத்துறை அமைச்சர் ஹறின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

என்று ஆலோசனை கூறப்பட்டமையால், கட்சிப் பிரமுகர்களின் உத்தியோகப்பற்றற்ற ஆலோசனைக் கூட்டமாக அதை நடத்தி முடிக்கத் தீர்மானிக்கப்பட்டது என அறிய வந்தது. பொறுப்பான – தந்திரோபாயமான – நகர்வுதான் அது.

அதே பாணியில் சிந்தித்து, இப்போதைய நெருக்கடிக்கு இணக்கமான – முரண்பாடற்ற – ஒரு தீர்மானத்திற்கு இன்றே வருவார்களேயானால், வரும் 29ஆம் திகதி வழக்குகளின் முதல் தவணையின் போதே, இந்தப் பிரச்சினையைச் சுமுகமாகத் தீர்த்து விட வாய்ப்புண்டு . அது தலைவர்களின் Wisdom – அறிவு ஞானத்தை – பொறுத்தது.

வீம்புக்கு மல்லுக் கட்டினால், நிதியும் வீண். நேரமும் பாழ். கட்சியின் எதிர்காலமும் கேள்விக்குறி.

கிளிநொச்சியில் கூட்டத்தை ஏற்பாடு செய்துள்ள பின்னணியில், இன்றைய கூட்டத்தில் சுமந்திரன் பங்கு பற்றார் என ஊகித்து, சில தினங்களுக்கு முன்னர் எழுதியிருந்தேன். தமது குடும்ப நிகழ்ச்சி நிரல் கருதி இன்றைய ஆலோசனைக் கூட்டத்தில் தாம் கலந்து கொள்ள முடியாமல் இருப்பதாகத் தம்மைக் கூட்டத்துக்கு அழைத்தவர்களிடம் சுமந்திரன் கூறியிருக்கின்றார் என்று தெரிகின்றது.

இந்தக் கூட்டத்துக்கு சுமந்திரன் முக்கியமில்லைதானே..! தமிழரசுக் கட்சியின் இந்த வழக்குகளில் சுமந்திரன் முன்னிலையாகவே முடியாது என்று சட்ட அறிவுடன் உரைத்த மற்றொரு ஜனாதிபதி சட்டத்தரணி – அதுவும் கட்சியின் சட்டத்துறை செயலாளராக – இருக்கின்றமையினால் இந்தப் பிரச்சினையை 'ப்பூ....!' வென்று அவர் ஊதித் தள்ளி விடுவார் எனக் கட்சி முழுமையாக நம்பலாம்.

இன்றைய கூட்டத்திற்கு சாணக்கியனும் வர மாட்டார். அவர் இந்தியாவில் ஒரு நிகழ்வுக்குச் சென்று விட்டார்.

எனினும் பெப்ரவரி 19 நடக்கவிருந்த கட்சியின் பொதுக்குழுக் கூட்டத்திற்கும் தேசிய மாநாட்டுக்கும் யாழ் நீதிமன்றத்தில் தடை உத்தரவு வாங்கிய பீற்றர் இளஞ்செழியன் இன்றைய ஆலோசனைக் கூட்டத்தில் பங்குபற்றுவார் எனத் தெரிகின்றது.

இன்று கூட்டம் நடைபெறவிருக்கையில், நேற்று எமது இணையத்தள வாசகர் ஒருவர் வெளிநாட்டிலிருந்து அழைப்பு எடுத்தார். தினசரி பத்திரிகையை அனுப்பும் தொலைபேசி இலக்கத்துக்கு whatsapp மூலம் தொடர்பு கொண்டார். என்னை யார் என்று கேட்டார். அறிமுகப்படுத்தினேன்.

அவர் வயதில் மூத்தவர். தந்தை செல்வா – அமிர் காலத்துத் தமிழரசு விசுவாசி போலும். இந்த நெருக்கடி சமயத்தில் தமது கட்சிக்கு உதவ வேண்டும் என்று நினைத்திருப்பார் என நினைக்கிறேன். கட்சி விடயங்கள் குறித்து நான் அதிகம் எழுதுவதால் என் கருத்தை – ஆலோசனையை – அறிய முற்பட்டார் என எண்ணுகிறேன். அவரது கேள்வி என்னைத் தூக்கி வாரிப் போட்டது.

"தம்பி..! தமிழரசுக் கட்சிக்கு இந்த நெருக்கடி சமயத்தில் உதவ வேண்டும் என்று நினைக்கிறேன். ஆனால் ஒரு சிக்கல். யாருக்கு உதவுவது என்பதுதான் கேள்வி. வழக்குப் போட்டவர்களும் கட்சிக்காரர்கள்தான். எதிராளிகளும் கட்சிக்காரர்கள்தான். கட்சியில் இருந்தபடியே கட்சியை யாப்பின்படி ஒழுங்காக நடத்தச் சொல்லி வலியுறுத்துபவர்களை ஆதரிப்பதா? அல்லது யாப்பின்படி இல்லாமல் தான்தோன்றித்தனமாக நடக்கும் நிர்வாகிகளை ஆதரிப்பதா? யாருக்கு உதவி செய்வது?" – இதுதான் அந்த அன்பரின் உரிமையுடன் கூடிய கேள்வியின் சுருக்கம்

எனக்கு என்ன பதில் கூறுவது என்று தெரியவில்லை ஒரு 'சமாளிஃபிகேஷன்' விட்டேன்.

"இரண்டு தரப்புகளும் கட்சிக்காரர்கள்தான். இன்று அடிபடுவார்கள். நாளை அரவணைத்துக் கொள்வார்கள்" – என்று கூறிச் சமாளித்தேன். என் பதில் அவருக்கு திருப்தி தரவில்லை என நினைக்கிறேன்.

சிறீதரன், சுமந்திரன், மாவை – மூவரின் தொலைபேசி இலக்கங்களையும் அவருக்குப் போட்டுவிட்டேன். அவர் களுடன் அவர் பேசினாரோ என்னவோ தெரியவில்லை.

ஆனால் தமிழரசுக் கட்சிப் பிரச்சினை தொடர்பில் அதன் ஆதரவாளர்கள் பலருக்கும் இந்த வெளிநாட்டு அன்பர் போன்ற குழப்ப நிலைதான் என்பதை நான் அறிவேன்.

விடயம் நீதிமன்றுக்கு போய்விட்டது. இயன்றவரை யாப்புப் படி கட்சியை நடத்துவோம் என்று வாக்குறுதி அளித்து, விடயத்தை முன்னெடுப்பதுதான் சாலச் சிறந்தது.

யாப்புப்படி இல்லாமல், தன்னிஷ்டப்படி கட்சியை நடத்திய மாவையின் கையில் இருந்து கட்சி விடுபட்டால், கட்சியை யாப்பின் அடிப்படையில், விடயங்களுக்கு அமைவாக, கொண்டு செல்வது புதிய நிர்வாகிகளுக்கு கஷ்டமாக இருக்காது என்றுதான் நினைக்கின்றேன்.

ஆனால் கட்சியின் இப்போதைய துரதிர்ஷ்ட நிலைமையை ஒப்புக் கொண்டு, இறங்கி வந்து, சமரசம் செய்து, பின்னர் கட்சியைப் பலப்படுத்துவதுதான் கட்சிக்கான வழிகாட்டல் அழகாக இருக்க முடியும்.

கட்சியின் செல்நெறி எப்படி அமையப் போகின்றது என்பதை இன்றைய கூட்டத்தின் போக்கில் ஓரளவு எடை போடக் கூடியதாக இருக்கும் என்று நம்புகிறேன்.

\+ \+ \+

இந்திய தூதுவரும், துணைத் தூதுவரும் நேற்று முன்தினம் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனை நேரில் அழைத்துப் பேச்சு நடத்தினர்.

அந்தச் சந்திப்புக்கான ஒழுங்கு நடைபெற்ற சமயமே இருவரும் – தூதுவரும், துணை தூதுவரும் – சுமந்திரனைச் சந்திப்பதற்கான நேரமும் ஒழுங்குபடுத்தப் பட்டதாகத் தெரியவந்தது. அந்தச் சந்திப்பு வரும் 26 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை நடைபெறுகிறது.

தமிழரசுக் கட்சியின் இரண்டு எம்.பிக்களையும் இந்திய தூதுவர் சந்திக்க உயர்நிலை அதிகாரிகள் ஒழுங்கு செய்தார்கள். ஆனால் ஓர் எம். பியின் சந்திப்புக் குறித்து மற்ற எம்.பிக்கு தகவல் வெளியிடப்படவில்லை என்பதுதான் இதில் பொதிந்து கிடக்கும் ராஜதந்திரம்.

## புளொட் அமைப்பின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

அர்ப்பணித்தவராவார்.

இவர் மாலைதீவு மீதான புளொட் அமைப்பின் தாக்குதலில் முன்னணிப் பாத்திரம் வகித்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## கச்சதீவு திருவிழா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

தேவாலயத்தின் வருடாந்தத் திருவிழா இன்றும், நாளையும் நடைபெறவுள்ளது.

இதற்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என்று யாழ்ப்பாணம் மாவட்ட செயலாளர் அம்பலவாணர் சிவபாலசுந்தரம் நேற்று ஊடகங்களிடம் தெரிவித்தார்.

உணவு, குடிதண்ணீர் வசதிகள் கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

இதேவேளை, சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்களை விடுவிக்காத நிலையில் இந்திய யாத்திரிகர்கள் எவரும் கச்சதீவு திருவிழாவில் பங்கேற்கமாட்டார்கள் என்று இராமேஸ்வரம்-வேர்க்கோடு பங்குத்தந்தை சந்தியாகு நேற்று முன்தினம் எழுத்தில் அறிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## சிறீதரன் எம்.பியை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

நகர்வுகளை விரைந்து மேற்கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

இலங்கைக்கான இந்தியத் தூதரகத்தின் பிரதித் தூதுவர் சத்யஞ்சல் பாண்டேவும் இணைந்திருந்த இந்தச் சந்திப்பில் ஈழத்தமிழர் நலன்சார் விடயங்களில் இந்தியாவின் முறையான வகிபங்கை உறுதிப்படுத்த வேண்டியுள்ளதன் அவசியம் குறித்தும் கலந்துரையாடப்பட்டது." – என்றுள்ளது.

## நாட்டு மக்கள் விரும்பும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

எனவே, ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து வெளியேறி ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்திருக்கும் உறுப்பினர்கள் அனைவரும் மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைய வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

மீண்டும் ரணிலுடன் இணைவதற்குத் தற்போது கிடைத்துள்ள நல்லதொரு சந்தர்ப்பத்தை சஜித் அணியினர் பயன்படுத்த வேண்டும் என்றும் அமைச்சர் ஹறின் பெர்னாண்டோ கேட்டுக்கொண்டார்.

நாட்டின் பொருளாதாரம் சீரான நிலைக்கு வரவேண்டுமெனில் ரணிலின் ஆட்சி நிலைத்திருக்க வேண்டும் என்றும் அவர் மேலும் கூறினார்.

# வீடு புகுந்து தாக்கி விட்டு தப்பியோடி வரும்போது விபத்தில் சிக்கிப் பலியான பல்கலை மாணவன்!

(என்.புவியரசன்)

யாழ்ப்பாணம், நீர்வேலியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற விபத்தில் உயிரிழந்த யாழ். பல்கலைக்கழக மாணவன், வீடொன்றில் தாக்குதல் நடத்தி, வாகனத்துக்குத் தீவைத்து விட்டுத் தப்பியோடி வரும்போதே விபத்தில் சிக்கியமை தெரியவந்துள்ளது.

நேற்றுமுன்தினம் அதிகாலை 5.30 மணியளவில் அச்சுவேலி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சிறுப்பிட்டி பகுதியில் நாய் குறுக்காக ஓடியதால் மோட்டார் சைக்கிளைக் கட்டுப்படுத்த முடியாமல் விபத்துக்குள்ளாகி பல்கலைக்கழக மாணவன் உயிரிழந்தார்.

யாழ். பல்கலைக்கழகத்தில் முதலாம் வருடத்தில் கலைப் பிரிவில் கல்வி கற்றுவரும் மானிப்பாய் வேம்படி பகுதியைச் சேர்ந்த ரமேஸ் சகீந்தன் (வயது 22) என்ற மாணவனே உயிரிழந்தார்.

மாணவன் உயிரிழந்த விவகாரம் மர்மமாக இருந்த நிலையில், மானிப்பாயைச் சேர்ந்த மற்றொரு இளைஞர் காயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தார்.

அவரிடம் நடத்தப்பட்ட விசாரணையில், உயிரிழந்த பல்கலைக்கழக மாணவனுடன் கூடப் பயணித்து, விபத்தில் சிக்கியவர் என்பது தெரியவந்தது.

மானிப்பாயிலுள்ள அவரது வீட்டில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில், விபத்தில் சிக்கிய மோட்டார் சைக்கிள் மீட்கப்பட்டது.

உயிரிழந்த பல்கலைக்கழக மாணவன் மோட்டார் சைக்கிளைச் செலுத்தியதும், காயமடைந்த மற்றையவர் பின்னாலிருந்து சென்றதும் தெரியவந்தது.

விபத்தின்போது, அவர்களது மோட்டார் சைக்கிளில் கிரிக்கெட் மட்டை இருந்ததும் தெரியவந்தது.

உயிரிழந்த மாணவன் அதிகாலை 2.58 மணிக்கு வீட்டிலிருந்து புறப்பட்டுள்ளார். அதிகாலை 4 மணியளவில் உடுப்பிட்டியில் வீடொன்றின் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இது தொடர்பில் பொலிஸார் பல்வேறு கோணங்களில் விசாரணை நடத்தியபோது, வல்வெட்டித்துறை பொலிஸ் பிரிவில் உள்ள உடுப்பிட்டி பிரதேசத்தில் உள்ள வீடொன்றுக்குள் நுழைந்து தாக்குதல் நடத்தி, ஹைஏஸ் வாகனத்துக்குத் தீ வைத்து விட்டு திரும்பி வரும்போதே பல்கலைக்கழக மாணவன் விபத்தில் சிக்கியது தெரியவந்தது.

உயிரிழந்த பல்கலைக்கழக மாணவனும் நண்பனும் இணைந்து இந்த வன்முறைத் தாக்குதலில் ஈடுபட்டு விட்டு திரும்பி வரும்போது விபத்து நிகழ்ந்தது.

கொழும்பு – யாழ்ப்பாணம் பஸ் சேவையில் ஈடுபடும் ஒருவரின் வீடு புகுந்து வீட்டு யன்னல் கண்ணாடிகளை அடித்து உடைத்ததுடன், ஹைஏஸ் வாகனத்துக்கு பெற்றோல் ஊற்றி தீவைத்துள்ளனர். எனினும், வீட்டிலிருந்தவர்கள் எச்சரிக்கையடைந்ததும், அவர்கள் தப்பியோடி விட்டனர்.

அங்கிருந்து வேகமாகத் தப்பிச் செல்லும்போதே நீர்வேலி, சிறுப்பிட்டி பகுதியில் விபத்தில் இருவரும் சிக்கியுள்ளனர். மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்ற பல்கலைக்கழக மாணவன் படுகாயமடைந்தார். அவரது வயிற்றின் கீழ் பகுதி கடுமையாகப் பாதிக்கப்பட்டிருந்தது. பல்சர் மோட்டார் சைக்கிளின் எரிபொருள் தாங்கி பகுதி தாக்கியதால் அவருக்கு உயிராபத்தான காயங்கள் ஏற்பட்டுள்ளன.

அவருடன் மோட்டார் சைக்கிளில் சென்றவரும், மற்றுமொரு நபரும் சேர்ந்து விபத்துச் சம்பவத்தை மறைக்க அந்த இடத்தைச் சுத்தம் செய்து, தடயங்களை மறைத்ததுடன், படுகாயமடைந்தவரை ஓட்டோவில் ஏற்றிச் சென்று, பின்னர் அம்புலன்ஸ் வாகனத்தில் ஏற்றியனுப்பியுள்ளனர்.

படுகாயமடைந்த பல்கலைக்கழக மாணவன் யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்துள்ளார்.

இதேவேளை, விபத்தில் சிக்கிய மோட்டார் சைக்கிளில் பயணித்த மற்றையவர், மோட்டார் சைக்கிளைத் தனது வீட்டுக்கு எடுத்துச் சென்று மறைத்து வைத்து விட்டு, சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்குச் சென்றுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## தமிழரின் துரதிஷ்டம்

ஈழத் தமிழர்களின் அரசியலில் கடந்த பதினைந்து ஆண்டுகளாக - யுத்தம் முடிவடைந்த காலம் தொடக்கம் - வருடத்துக்கு இரண்டு அல்லது மூன்று முறை நடக்கும் வெளிநாட்டு திருவிழா ஒன்று இப்போதும் அடுத்த திங்கட்கிழமையன்று தொடங்குகின்றது.

ஜெனிவாவில் நடைபெறும் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் கூட்டத்தொடர்தான் அது.

இந்த முறை, வரும் திங்களன்று 26ஆம் திகதி தொடக்கம் ஏப்ரல் மாதம் ஐந்தாம் திகதி வரை ஜெனிவா அமர்வு நடைபெறுகின்றது. இது கவுன்ஸிலின் 55 ஆவது கூட்டத்தொடர்.

இந்த அமர்வில் இலங்கை தொடர்பாகக் கடைசியாக நிறைவேற்றப்பட்ட தீர்மானம் சம்பந்தமான முன்னேற்றங்கள் குறித்து ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் வாய்மூலம் விளக்கம் அளிக்கும் நிகழ்வு இடம்பெறவிருக்கின்றது.

இலங்கையில் யுத்தம் முடிந்து பதினைந்து ஆண்டுகளாக இந்த அமர்வுகளில் இலங்கை தொடர்பான புதிய, புதிய தீர்மானங்கள் நிறைவேற்றப்படுகின்றமை மற்றும் அவை தொடர்பான அவதானிப்புக்கள், அறிக்கைகள் அடுத்தடுத்த அமர்வுகளில் முன் வைக்கப்படுகின்றமை ஆகியவற்றுடன் காலம் இழுபட்டுச் செல்கின்றது. உருப்படியாக எதுவும் நடக்கவே இல்லை.

யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் இடம்பெற்றவை எனக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள், யுத்தக் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள் போன்றவை தொடர்பில் சர்வதேசநியமங்களுக்கு அமைவான விதத்தில், நீதி முறையான விசாரணைகளை நடத்தி, உண்மைகளைக் கண்டறிந்து, பொறுப்புக் கூறல் கடப்பாட்டை நிலைநாட்டுவித்து, குற்றம் இழைத்தோரை அடையாளம் கண்டு, சட்டத்தின் முன் நிறுத்தி, பாதிக்கப்பட்டோருக்கு உரிய இழப்பீடுகளைப் பெற்றுக் கொடுத்து, மீள நிகழாமையை உறுதிப்படுத்தும் விதத்தில் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தும் விதத்திலான தீர்மானங்கள் வரிசையாக ஜெனிவாவில் இரண்டு, மூன்று ஆண்டுகளுக்கு ஒரு தடவை தொடர்ந்து நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

ஆனால் இந்த விடயத்தில் களத்தில் - செயற்பாட்டில் - கிஞ்சித்தேனும் முன்னேற்றம் நிகழ்ந்ததாக இல்லை என்பதுதான் யதார்த்தப் புறநிலையாக உள்ளது.

தமிழர் தாயகத்தில் இடம்பெற்ற தமிழின அழிப்புக்கு நீதி கேட்டு, தமிழர்கள் சர்வதேச ரீதியில் நடத்தி வந்த போராட்டங்கள் யாவும் நீர்த்துப்போகும் நிலையை எட்டி விட்டமையை ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கை தொடர்பான விடயத்துக்கான முக்கியத்துவம் சிறுகச் சிறுக அருகி வருவதிலிருந்து உணர்ந்து கொள்ள முடிகின்றது.

இலங்கை விடயத்துக்கு ஜெனிவா மனித உரிமைகள் கவுன்ஸிலில் யுத்தம் முடிந்த பின், 2010 ஆம் ஆண்டிலிருந்து 2015ஆம் ஆண்டு வரை கொடுக்கப்பட்டு வந்த அழுத்தம் - முக்கியத்துவம் - இப்போது குறைந்து வருவது கண்கூடு.

‘தாமதிக்கப்பட்ட நீதி மறுக்கப்பட்ட நீதியாகிவிடும்’ என்ற சட்ட வாக்கியத்திற்கு அமைய, ஈழத் தமிழர்களுக்கு எதிரான இனப்படுகொலை விவகாரத்தில் தமிழர்களுக்கு தாமதிக்கப்படுகின்ற நீதி அதன் மூலம் மறுக்கப்பட்ட நீதியாகி வருகின்றமையை நாம் நேரில் காண்கின்றோம்.

நீதி தேடும் தமிழர்களின் போராட்டத்திற்கு சர்வதேச அழுத்தமே - பங்களிப்பே - மிக முக்கியமானது. அது ஒன்றுதான் தமிழர்களுக்கு உள்ள ஒரே மார்க்கமாகும். அதுவேதான் பற்றுக்கோடு.

அதைப் பெறுவதற்கு ஈழத் தமிழர் சமூகம் புலம்பெயர்ந்த நாடுகளிலும், தமிழர் தாயகத்திலும் ஒன்றுபட்டு, ஒரே சக்தியாக, ஒரே குரலில் நிற்பது முக்கியம்.

ஆனால் களத்திலும் சரி, புலம்பெயர் தேசங்களிலும் சரி, முன்னெப்போதும் இல்லாத விதத்தில் தமிழர் சமூகம் பிளவுண்டு, அணி பிரிந்து, கன்னை கட்டி, வலிமை இழந்து நிற்கின்றமைதான் களயதார்த்தமாக உள்ளது.

நடைமுறைச் சாத்தியங்களையும், கள நிலைமைகளையும் புரிந்து ஏற்றுக்கொள்ளாமல், நடைமுறைச் சாத்தியமற்ற, வெளி வேஷ, வெற்றுக் கோஷ அரசியலை முன்வைத்து, அவற்றின் அடிப்படையில் அணி பிரிந்து, தாயகத்திலும், புலம்பெயர் தேசங்களிலும் மல்லுக்கட்டி, தன்னைத்தானே வலுவிழக்கச் செய்து கொண்டிருக்கின்றது தமிழினம்.

தாயகத்திலும் புலம்பெயர் தேசங்களிலும் தமிழர் தரப்பை ஒற்றுமைப்படுத்தி, வலிமையாக வழிப்படுத்தும் தரப்புகளோ தலைமைகளோ இல்லை. சுயத்தை முன்னிறுத்தும் தலைமைகளே நம் மத்தியில் தாராளம். அவற்றினால் ஐக்கியப்பட்ட தமிழர் எழுச்சியை ஏற்படுத்துவது சாத்தியமே அற்றது.

அதுதான் தமிழர் தேசத்தின் இன்றைய துரதிஷ்டம். பின்னடைவு. பாதிப்பு. எல்லாமுமே.

# மணிப்பூர் வன்முறைக்குக் காரணமான சர்ச்சை தீர்ப்பு திரும்பப் பெறப்பட்டது



மைத்தேயி சமூகத்தை பழங்குடியினர் பட்டியலில் இணைக்கலாம் என்று கடந்த ஆண்டு மார்ச் 27 ஆம் திகதி வழங்கிய தீர்ப்பின் சர்ச்சைக்குரிய பத்தியை நீக்கி மணிப்பூர் உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மேலும், அந்தப் பத்தி உச்ச நீதிமன்ற அரசியல் சாசன அமர்வின் தீர்ப்புக்கு எதிராக உள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

இது தொடர்பான வழக்கை நேற்று விசாரித்த மணிப்பூர் உயர் நீதமன்ற நீதிபதி கோல்மைய் கைபுல்ஷில்லுவின் தலைமையிலான அமர்வு, "மனுதாரர்கள், ரிட் மனு விசாரணையின்போது தங்களின் உண்மை மற்றும் சட்டம் பற்றி தவறான புரிதல் காரணமாக நீதிமன்றத்தை சரியாக வழிநடத்த தவறிவிட்டனர். அதனால் சட்டத்தின் தவறான புரிதலில் அந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

மேலும், அந்த உத்தரவு, மகாராஷ்டிரா அரசு - மலிந்த் அண்ட் ஓ.ஆர்.எஸ். வழக்கில், பழங்குடியினர் பட்டியலை நீதிமன்றங்கள் மாற்றவோ, திருத்தவோ முடியாது என்ற உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு எதிராகவும் உள்ளது. அதன்படி, முன்பு வழங்கப்பட்ட தீர்ப்பின் பத்தி எண் 17 (iii) நீக்கப்பட வேண்டும். எனவே, அந்தப் பத்தி நீக்கப்பட வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது என்று தீர்ப்பில் தெரிவித்துள்ளது.

முன்னதாக, தற்போது நீக்கப்பட்டுள்ள பத்தியில்,

"இந்த வழக்கின் முதல் எதிர்மனுதாரர் இந்த உத்தரவின் நகல் கிடைத்த நான்கு வார காலத்துக்குள், ரிட் மனுவின் உத்தரவில் உள்ள நிபந்தனைகளின்படி மனுதாரின் மைத்தேயி சமூகத்தை பழங்குடியினர் பட்டியலில் சேர்க்கும் கோரிக்கையை விரைவாக முன்னுரிமை அடிப்படையில் பரிசீலிக்க வேண்டும்" என்று கூறப்பட்டிருந்தது.

உயர் நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பு மணிப்பூரில் பெரும் இனக் கலவரத்துக்கு வழி வகுத்தது. இதனால் மாநிலத்தின் குகி மற்றும் மைத்தேயி இன மக்களுக்கு இடையே பெரும் கலவரம் மூண்டது. இந்த இரண்டு சமூகத்தினர் இடையே கடந்த ஆண்டு மே மாதம் முதல் கடுமையான மோதல் நீடித்து வருகிறது. மாநிலம் முழுவதும் கலவரம் பரவி போர்க்களமாக மாறியது. 170 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். பல்லாயிரக்கணக்கானோர் வாழ்வாதாரத்தை இழந்துள்ளனர்.

இந்தக் கலவரங்களைத் தொடர்ந்து, கடந்த ஆண்டு உயர் நீதிமன்றத்தின் மார்ச் 27 தீர்ப்பினை எதிர்த்தும், கலவரம் தொடர்பாகவும் பல மனுக்கள் உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டன. உச்ச நீதிமன்றம் அதே ஆண்டில், உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு அருவருக்கத்தக்கது என்று கூறியது. உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட் தலைமையிலான அமர்வு, "நான் உங்களுக்கு (வழக்கறிஞர்களுக்கு) ஒன்றைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். உயர் நீதிமன்றத்தின் உத்தரவு தவறானது. அந்த உத்தரவை நாம் நிறுத்தி வைக்கலாம் எனக் கருதுகிறேன்" என்று கூறியிருந்தது.

இதனிடையே, கடந்த ஒக்டோபரில், மார்ச் 27 ஆம் திகதி தீர்ப்பினை எதிர்த்து மணிப்பூர் பழங்குடியினர் அமைப்புகள் மேல்முறையீடு செய்ய உயர் நீதிமன்றம் அனுமதி வழங்கியது. இதனைத் தொடர்ந்து அனைத்து மணிப்பூர் பழங்குடியினர் சார்பில் மேல்முறையீடு செய்யப்பட்டது.

இந்த ஆண்டு ஜனவரி 20 ஆம் திகதி, தனது மார்ச் 27 ஆம் திகதி தீர்ப்பினை மாற்றி அமைக்கக் கோரிய மறுசீராய்வு மனுவை மணிப்பூர் நீதிமன்றம் ஏற்றுக்கொண்டது.

இதுகுறித்து பதில் அளிக்கக் கோரி மத்திய மாநில அரசுகளுக்கு நோட்டீஸ் அனுப்பியது. இந்தப் பின்னணியில் மைத்தேயி சமூகத்தை பழங்குடியினர் பட்டியலில் இணைக்கலாம் என்று 27 மார்ச், 2023 இல் வழங்கிய தீர்ப்பின் சர்ச்சைக்குரிய பத்தியை நீக்கி மணிப்பூர் உயர் நீதிமன்றம் இப்போது உத்தரவிட்டுள்ளது.

# விவசாயிகளுக்கு எதிரான பாசிச ஆட்சி நடைபெறுகின்றது

## அண்ணாமலை குற்றச்சாட்டு

"தங்கள் நிலங்களைக் காக்கப் போராடும் விவசாயிகள் மீது குண்டாஸ் சட்டம் போடுவதும், அவர்களைச் சந்திக்க மறுத்துக் கைது செய்வதுமான, விவசாயிகளுக்கெதிரான பாசிச ஆட்சி தமிழகத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது."

– இவ்வாறு பா.ஜ.க. மாநிலத் தலைவர் அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தனது எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில்,

"திருவண்ணாமலை மாவட்டம் செய்யாறு அருகே, மேல்மா சிப்காட் விரிவாக்கத் திட்டத்துக்காக, 3,200 ஏக்கர் விவசாய நிலங்களை தி.மு.க. அரசு கையகப்படுத்துவதற்கு எதிர்ப்பு தெரிவித்து, கடந்த 7 மாதங்களாக விவசாயிகள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். விவசாயிகளின் போராட்டத்தை ஒடுக்கும் வகையில், விவசாயிகளைக் குண்டர் சட்டத்தில் கைது செய்த தி.மு.க. அரசு, விவசாயிகள் மற்றும் தமிழக பா.ஜ.க. கடுமையாக எதிர்த்ததால், வேறு வழியின்றி குண்டர் சட்டத்தை ரத்து செய்தது.

தொடர்ந்து, மேல்மா விவசாயிகள் கடந்த 236 நாள்களாக உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறார்கள். இதனையடுத்து, சமீபத்தில் பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு சட்டமன்றத்தில் பேசுகையில், தங்கள் விவசாய நிலங்களைக் காப்பாற்றப் போராடிய மேல்மா விவசாயிகளை அவமானப்படுத்தும் விதமாக, போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் வெளியூர்களைச் சேர்ந்தவர்கள், அவர்களுக்குச் சொந்தமாக நிலம் இல்லை, சிப்காட் தொடங்க பல விவசாயிகள் ஆதரிக்கின்றனர் என்று கூறியிருந்தார்.

இதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்து, 'சட்டப்பேரவையில் விவசாயிகளுக்கு எதிராக அமைச்சர் எ.வ.வேலு தெரிவித்த கருத்தை அவை குறிப்பிலிருந்து நீக்க வேண்டும், மேல்மா சிப்காட் திட்டத்தைத் தமிழக அரசு கைவிட வேண்டும்' என்ற கோரிக்கைகளை வலியுறுத்தி, திருவண்ணாமலை மாவட்



டத்தில் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த விவசாயிகளைக் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மேலும், இது குறித்து, சென்னை தலைமைச் செயலகத்தில், முதல்வர் மு.க.ஸ்டாலினை சந்தித்து முறையிடச் சென்ற விவசாயிகளையும் பொலிஸார் கைது செய்துள்ளனர் என தெரிகிறது.

விவசாயிகளைக் கொச்சையாகப் பேசி அவமானப்படுத்திய அமைச்சரைக் கண்டிக்கத் திராணி இல்லாமல், தங்கள் நிலங்களைக் காக்கப் போராடும் விவசாயிகள் மீது குண்டாஸ் சட்டம் போடுவதும், அவர்களைச் சந்திக்க மறுத்துக் கைது செய்வதுமான, விவசாயிகளுக்கெதிரான பாசிச ஆட்சி தமிழகத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

உடனடியாக, கைது செய்யப்பட்டுள்ள விவசாயிகள் அனைவரையும் விடுவிக்க வேண்டுமென்றும், அவர்கள் கோரிக்கைகளைப் பேச்சுவார்த்தையின் மூலம் தீர்க்க முதல்வர் ஸ்டாலின் முன்வர வேண்டும் என்றும் தமிழக பா.ஜ.க. சார்பாக வலியுறுத்துகிறோம்." – என்று குறிப்பிட்டுள்ளார்.

# உக்ரைன் - ரஷ்யா யுத்தம் ஆரம்பித்து 2 ஆண்டுகள்



உக்ரைன் மீது ரஷ்யா மேற்கொண்டுள்ள ஆக்கிரமிப்பு யுத்தம் ஆரம்பிக்கப்பட்டு சுமார் 2 ஆண்டுகளை அண்மிக்கிறது.

2022 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 24 ஆம் திகதி உக்ரைன் மீது ரஷ்யா தாக்குதல் நடத்த ஆரம்பித்தது.

இதன்படி, இதுவரையான காலப்பகுதியில் 8 ஆயிரத்துக்கும் அதிகமான ஏவுகணைகள் மற்றும் 4 ஆயிரத்து 630 ஆளில்லா விமானங்கள் என்பவற்றை ரஷ்யா உக்ரைன் மீது ஏவியுள்ளதாக உக்ரைன் விமானப் படையின் பேச்சாளர் யூரி இஹ்னாட் தெரிவித்துள்ளார்.

உக்ரைனிய வான்பாதுகாப்பு தரப்பினர் இந்த காலப்பகுதியில் 3,605 ஆளில்லா விமானங்களை சுட்டு வீழ்த்தியதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவ்வாறு ஏவப்பட்ட ஆளில்லா விமானங்களில் ஈரானின் தயாரிப்புகளும் அடங்குவதாக உக்ரைன் விமானப் படையின் பேச்சாளர் யூரி இஹ்னாட் தெரிவித்துள்ளார்.

# ஈரான் புதிய ஏவுகணைகளை ரஷ்யாவிற்கு வழங்கியுள்ளது









ஈரான் சக்திவாய்ந்த பல புதிய ஏவுகணைகளை ரஷ்யாவிற்கு வழங்கியுள்ளது.

இது இரு நாடுகளுக்கும் இடையிலான இராணுவ ஒத்துழைப்பை ஆழப்படுத்தியுள்ளதாக சர்வதேச ஊடகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஈரானிடம் இருந்து சுமார் 400 ஏவுகணைகளை வழங்கும் நடவடிக்கையின் கீழ் பல ஃபதே-110 ரக ஏவுகணைகள் ரஷ்யாவுக்கு வழங்கப்பட்டுள்ளன.

இது சுமார் 300 முதல் 700 கிலோமீற்றர் வரையிலான தூரத்தில் உள்ள இலக்குகளை தாக்கும் என தெரிவிக்கப்படுகிறது.

எவ்வாறாயினும் இந்த விடயம் தொடர்பில் ஈரான் பதிலளிக்க மறுத்துள்ளதாக றொய்ட்டர்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

# இஸ்ரேலில் அதிகாலைவேளை ஆயுததாரிகள் துப்பாக்கிச் சூடு





இஸ்ரேல் ஆக்கிரமிப்பு மேற்கு கரை பகுதியில் ஆயுததாரிகள் மூவர் சரமாரியாக நடத்திய துப்பாக்கிச்சூட்டில் இஸ்ரேலியர் ஒருவர் உயிரிழந்துள்ளனர். மேலும் எட்டு பேர் காயமடைந்தனர்.

நேற்று அதிகாலை 7.30 மணிக்கு போக்குவரத்து குறைவாக இருக்கும்போது சோதனை சாவடிக்கு அருகில் சென்ற கார்களை நோக்கி மூவர் துப்பாக்கிச் சூடு நடத்தினர்.

கிழக்கு ஜெருசலேமில் உள்ள பிரதான நெடுஞ்சாலையில் இந்த தாக்குதல் நடந்ததாகவும் மூவரில் இருவரை பாதுகாப்பு பொலிஸார் சுட்டு கொன்றுள்ளனர் என்றும் இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

தப்பிச் சென்ற மூன்றாவது நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை, காசாவில் இஸ்ரேல் இராணுவம் நடத்தி வரும் தாக்குதலில் கடந்த 24 மணி நேரத்தில் மட்டும் 64 போர் உயிரிழந்துள்ளனர்.




# 400 ரயில் கடவைகளுக்கு பாதுகாப்பு வேலி அமையும்

## ரயில்வேத் திணைக்களம் நடவடிக்கை

400 ரயில் கடவைகளில் பாதுகாப்பு வேலிகளை அமைக்க ரயில்வேத் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

இதற்காக 1,200 பணியாளர்கள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர் என ரயில்வே பொதுமுகாமையாளர் எச்.எம்.கே.டபிள்யு. பண்டார தெரிவித்துள்ளார்.

அரசின் பல்நோக்குத் திட்டத்தின் கீழ் பணியில் அமர்த்தப்பட்டவர்களை இந்த கடமைகளில் ஈடுபடுத்த திட்டமிடப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

நிதி அமைச்சுடன் நேற்று முன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலில் இந்த ஆள்சேர்ப்பிற்கு இணக்கம் காணப்பட்டதாக ரயில்வே பொது முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு வேலிகள் இல்லாத அதிக எவான ரயில் கடவைகள், புத்தளம் மற்றும் கரையோர மார்க்கத்தில் காணப்படுகின்றன.

இவற்றில் சில கடவைகளுக்கு பொலிஸாரினால் பாதுகாப்பு வேலிகள் பொருத்தப்பட்டிருந்த போதிலும், அண்மையில் புத்தளம் – ஆராச்சிக் கட்டுவ, மையாவ ரயில் கடவையில் இடம்பெற்ற விபத்தின் பின்னர், அந்த வேலிகள் அகற்றப்படும் என பொலிஸார் தெரிவித்த னர் என ரயில்வே பொது முகாமையாளர் எச்.எம்.கே.டபிள்யு. பண்டார மேலும் கூறியுள்ளார்.



# இலங்கையில் தேடப்பட்டு வருகின்ற 13 சந்தேகநபர்கள் டுபாயில் கைது!

நாட்டில் பொலிஸாரால் தேடப்பட்டு வந்த 13 சந்தேகநபர்கள் டுபாயில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் தொடர்பில் சர்வதேச பொலிஸாருடன் இணைந்து விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனப் பதில் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோன் தெரிவித்துள்ளார். குற்றத்தடுப்பு பிரிவு அதிகாரிகளால் இந்த விசாரணைகள் முன்னெடுக்கப்படு வருகின்றன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# நாட்டில் அதிகரிக்கும் வெப்பம் 6 மாவட்டங்களுக்கு எச்சரிக்கை



அதிக வெப்பம் தொடர்பில் ஆறு மாவட்டங்களுக்கு எச்சரிக்கை அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

கொழும்பு, கம்பஹா, புத்தளம், குருநாகல், ஹம்பாந்தோட்டை மற்றும் மொனராகலை ஆகிய 6 மாவட்டங்களுக்கே இந்த அறிவித்தல் பிறப்பிக்கப் பட்டுள்ளது.

இந்த மாவட்டங்களில் மனித உடலால் தாங்கிக்கொள்ளக்கூடிய வெப்பத்தை விட அதிக உஷ்ணம் எதிர் பார்க்கப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

அதிக வெப்பத்திலிருந்து மக்கள் தம்மை பாதுகாத்துக் கொள்வதற்கான அறிவுறுத்தல்களையும் திணைக்களம் வெளியிட்டுள்ளது.

அதிகளவு தண்ணீர் அருந்துதல், அதிக சோர்வை ஏற்படுத்தும் செயற்பாடுகளில் ஈடுபடாதிருத்தல், வெள்ளை அல்லது வெளிர் நிற ஆடைகளை அணிதல் மற்றும் நிழலான இடங்களில் தங்கியிருத்தல் போன்ற அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

# ஜே.வி.பியின் தேசிய மக்கள் சக்தி பதிவு குறித்து நீதிமன்றில் சர்ச்சை




தேர்தல்கள் ஆணைக்குழுவினால் தேசிய மக்கள் சக்தி பதிவு செய்யப்பட்ட விதம் சட்டவிரோதமானது என அறிவிக்கக் கோரி, வினிவிந்த பெரமுனவின் செயலாளர் சட்டத்தரணி நாகாநந்த கொடித்துவக்கு தாக்கல் செய்த மனுவை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்வதற்கு உயர் நீதி மன்றத்தினால் அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி, அடுத்த மாதம் 04 ஆம் திகதி இந்த மனு மீதான விசாரணையை மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப் பட்டுள்ளது.

நீதியரசர்கள் பிரேத்தி பத்மன் சூரசேன, அச்சல வெங்கப்புலி மற்றும் அர்ஜுன ஒபேசேகர ஆகிய மூவரடங்கிய உயர் நீதிமன்ற அமர்வு முன்னிலையில் இந்த நகர்த்தல் பிரேரணை நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது, மனுதாரர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி நாகாநந்த கொடித்துவக்கு நீதிமன்றில் சான்றுகளை முன்வைத்தமையுடன் பிரேரணையை பரிசீலிப்பதற்கு திகதியொன்றை நிர்ணயிக்குமாறும் கேட்டுக் கொண்டார்.

கோரிக்கைகளை ஏற்ற மூவரடங்கிய நீதியரசர்கள் குழாம் தொடர்புடைய மனுவை பரிசீலிப்பதற்கு திகதி நிர்ணயித்தது.

வினிவிந்த பெரமுனவினை அரசியல் கட்சியாகப் பதிவு செய்வதற்கு மறுத்த தேர்தல்கள் ஆணைக்குழுவின் தீர்மானத்திற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனு தொடர்பில் நாகாநந்த கொடிதுவுக்கு இந்த நகர்த்தல் பிரேரணையைச் சமர்ப்பித்துள்ளார்.

மக்கள் விடுதலை முன்னணியின் ஒரு பகுதியான தேசிய மக்கள் சக்தி அரசியல் கட்சியாகப் பதிவு செய்யப்பட்டிருப்பது சட்டத்திற்கு முரணானது என நாகாநந்த கொடிதுவாக்கு தமது பிரேரணையின் ஊடாகச் சுட்டிக்காட்டியுள்ளார்.

அரசமைப்பின் 103(2) பிரிவின்படி, ஒரே கட்சியின் வெவ்வேறு பிரிவுகளை அரசியல் கட்சிகளாகப் பதிவு செய்வது தேர்தல் சட்டங்களுக்கு முரணானது என்பதுடன் அதை மீறி நடப்பது சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தலை நடத்துவதற்கு அரசமைப்பு உத்தரவாதம் அளித்துள்ள உரிமையை மீறும் நடவடிக்கை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதன்படி, தேசிய மக்கள் சக்தி பதிவு செய்யப்பட்ட விதம் சட்டவிரோதமானது என அறிவிப்பதற்கு அனுமதி வழங்குமாறு பிரேரணையினூடாக நாகாநந்த கொடிதுவுக்கு உச்ச நீதிமன்றத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.



# தடை செய்யப்பட்ட வீதி ஊடாக பயணித்த பஸ் குடை சாய்ந்தது

## எண்மர் காயம்; நானுஓயா பகுதியில் சம்பவம்

(தலவாக்கலை நிருபர்)

நுவரெலியா – ஹட்டன் பிரதான வீதியை ஒட்டிய நானுஓயா ரதெல்ல குறுக்கு வீதியில் நேற்று முந்தினம் இரவு 7.30 மணியளவில் பஸ் ஒன்று குடைசாய்ந்து விபத்துக்குள்ளானது. அதில் காயமடைந்த எட்டுப் பயணிகள் நுவரெலியா பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என நானுஓயா பொலிஸார் தெரிவித்தனர். மாத்தறை பிரதேசத்திலிருந்து சிவனொளிபாதமலை நோக்கிச் சென்று கொண்டிருந்த பஸ் ஒன்று, பொதுவாக பஸ்கள் பயணம் செய்ய தடை செய்யப் பட்டுள்ள இந்த நானுஓயா ரதெல்ல குறுக்கு வீதியில் அனுமதியின்றி பயணித்த போதே வீதியில் குடைசாய்ந்து இவ்வாறு விபத்துக்குள்ளானது.

விபத்தின் போது பஸ்ஸில் 34 பேர் பயணித்துள்ளனர். காயமடைந்தவர்கள் சிகிச்சைக்காக நுவரெலியா பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். செங்குத்தான இந்த வீதியில் அதிக வேகத்துடன் பயணித்த பஸ்ஸைக் கட்டுப்படுத்த முடியாமல் போந்தாகவும், அதனால் பஸ் மண்மேட்டில் மோதி வீதியில் குடைசாய்ந்து இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாகவும் கூறப்பட்டது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை நானுஓயா பொலிஸார்முன்னெடுத்துள்ளனர்.

# ஆரம்பப்பிரிவு மாணவர் சகலருக்கும் இலவச உணவு வழங்க நடவடிக்கை

ஆரம்பப்பிரிவில் கல்வி கற்கும் அனைத்து மாணவர்களுக்கும் அடுத்த மாதம் முதல் இலவச உணவு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் எனக் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

அதற்கமைய, தரம் 1 முதல் 5 வரை கல்வி பயிலும் 17 லட்சம் மாணவர்களுக்கு இலவச உணவு வழங்கப்படவுள்ளது.

காலை 7.30 மணிக்கு ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கு உணவு வழங்க திட்டமிடப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

ஊட்டச்சத்து குறைபாட்டால் பாதிக்கப்படும் சிறுவர்கள் தொடர்பில் சுகாதாரத்துறை வெளிக்கொணர்ந்த விடயங்களை கருத்திற்கொண்டு இந்தத் திட்டம் செயற்படுத்தப்படவுள்ளது.




இதற்காக 16.6 பில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட செயன்முறையின் அடிப்படையில், பொது சுகாதார பரிசோதகர்களின் மேற்பார்வையில் உணவு தயாரிக்கப்படும் எனக் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

# நெடுந்தீவில் கைதான தமிழ்நாட்டு மீனவர்கள் 18 பேர் ஒத்திவைப்புச் சிறையுடன் விடுதலை

## ஒருவருக்கு 6 மாத சிறைத்தண்டனை




எல்லை தாண்டி மீன் பிடியில் ஈடுபட்டமைக்காக இம்மாதம் 8 ஆம் திகதி கைது செய்யப்பட்ட 18 தமிழக மீனவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

மீனவர்கள் பயணித்த படகொன்று அரசுடைமையாக்கப்பட்டுள்ளது. படகோட்டி ஒருவருக்கு 6 மாத சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

நெடுந்தீவு கடற்பரப்பில் இரண்டு படகுகளுடன் எல்லை தாண்டி மீன்பிடித்துக்கொண்டிருந்த போது 19 தமிழக மீனவர்களும் கடற்படையினரால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

கடற்படையினரால் ஒப்படைக்கப்பட்ட தமிழக மீனவர்களை யாழ். மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்கள அதிகாரிகள் ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தினர்.

இந்த வழக்கு நேற்று ஊர்காவற்றுறை நீதிவான் ஜே.கஜநிதிபாலன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, தமிழக மீனவர்கள் 19 பேருக்கு எதிராக குற்றப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது.

ஒரு படகின் உரிமையாளர் குற்றம் இடம்பெற்ற போது படகில் இருந்தமையால், அந்த படகை அரசுடைமையாக்கி நீதவான் உத்தரவிட்டார்.

மற்றைய படகின் படகோட்டி ஜி.பி.எஸ். கருவியை பாவித்தும் எல்லை தாண்டியமையால், அவருக்கு 6 மாதங்கள் சிறைத்தண்டனை விதித்து நீதிவான் உத்தரவு பிறப்பித்தார்.

ஏனைய 18 மீனவர்களும் 5 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 18 மாத சிறைத்தண்டளை என்ற அடிப்படையில் விடுதலை செய்யப்பட்டனர்.

# ஜனவரி மாத பணவீக்கம் 6.5 வீதம் வரை உயர்வு!



நாட்டின் பணவீக்கம் 6.5 வீதம் வரை அதிகரித்துள்ளது.

2023 டிசம்பரில் பணவீக்கம், 4.2 சதவீதமாக இருந்ததாக மக்கள் தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிவரவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, 2023 டிசம்பரில் 1.6 சதவீதமாக இருந்த உணவு பணவீக்கம், 2024 ஜனவரியில் 4.1 சதவீதமாக அதிகரித்துள்ளதாகவும் அந்தத் திணைக்களம் தெரிவித்துள்ளது.


# ‘வெலிவிட்ட சுத்தா’ கைது



வெலிவிட்ட சுத்தா’ எனப்படும் திட்டமிட்ட குற்றச்செயல்களில் ஈடுபடும் ஒருவர் கடுவெல பிரதேசத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட நபரிடமிருந்து 15 கிராம் 300 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

47 வயதான சந்தேகநபர், கடுவெல – வெலிவிட்ட பகுதியில் உள்ள வீடொன்றில் பதுங்கியிருந்த போதே கைது செய்யப்பட்டுள்ளார்.



# 24 தெரிவுக்குழுக்களுக்கு உறுப்பினர்கள் நியமனம்

நாடாளுமன்றத்தினால் 2024 பெப்ரவரி 09 ஆம் திகதி நிறைவேற்றப் பட்ட தீர்மானத்தின் பிரகாரம், ஒன்ப தாவது நாடாளுமன்றத்தின் ஐந்தாவது கூட்டத்தொடரில் குழுக்களில் பணியாற் றுவதற்காக நியமிக்கப்பட்ட உறுப்பினர் களின் பெயர்களை பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ நேற்று சபையில் சமர்ப்பித்தார்.

இதற்கமைய, ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் பற்றிய குழுவின் உறுப்பினர்களாக பவித்ராதேவி வன்னியாரச்சி, விஜேதாச ராஜபக்ஸ, விஜித பேருகொட, தாரக்க பாலசூரிய, அநுராத ஜயரத்ன உள்ளிட்டோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவின் உறுப்பினர்களாக மொஹான் பிரியதர்ஷன டி சில்வா, லசந்த அழகிய வண்ண, பிரசன்ன ரணவீர, கே. காதர் மஸ்தான், டயனா கமகே, சாமர சம்பத் தசநாயக்க, வஜிர அபேவர்தன, ஏ.எல். எம். அதாவுல்லா உள்ளிட்டோர் நியமிக் கப்பட்டுள்ளனர்.

அத்துடன், அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் உறுப் பினர்களாக ஜகத் புஷ்பகுமார, ஜானக வக்கும்புர, லொஹான் ரத்வத்தே, இந்திக அனுருத்த ஹேரத், சதாசிவம் வியாழேந்திரன், அருணாச்சலம் அரவிந்த குமார், மருதபாண்டி ராமேஸ் வரன் உள்ளிட்டோரும் நியமிக்கப்பட் டுள்ளனர்.



# 5 வருடங்களில் 67 யானைகள் வவுனியா மாவட்டத்தில் சாவு!

**(கே.வசந்தன்)**

வவுனியா மாவட்டத்தில் 2019 ஆம் ஆண்டு தொடக்கம் 2024 வரை 67 யானைகள் பலியாகியுள்ளன என வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக் களம் தெரிவித்துள்ளது.

குறிப்பாக செட்டிகுளம், நெடுங் கேணி, வவுனியா உட்பட வனத்தினை அண்மித்த பகுதிகளிலில் அனுமதியற்ற சட்டவிரோத மின்சார வேலியில் சிக்கி யும், வெங்காய வெடி, துப்பாக்கி சூடு போன்றவற்றுக்கு இலக்காகியும் சட்ட விரோத துப்பாக்கி வெடிகள் மற்றும் ரயில் விபத்துக்களாலும் இவை பலியா கியுள்ளன.

பெரும்பாலும் 05 வயது தொடக்கம் 40 வயதுடைய யானைகளே இவ்வாறு பலியாகியுள்ளன. இவ்வருடம் இதுவரை 03 யானை கள் பலியாகியுள்ளன. கடந்த வருடம் 17 யானைகள் வரை பலியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இன்றைய ராசி பலன்கள் - 23.02.2024




பொறுமையான அணுகுமுறை தேவை. திட்டமிட்டு செயலாற்ற வேண்டும். உறுதியான அணுகுமுறை தேவை.

பணியிடச் சூழல் அவ்வளவு சிறப்பாக இருக்காது. பணியில் தாமதங்கள் காணப்படும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு ஏற்பட வாய்ப்புள்ளது. மகிழ்ச்சியை தக்க வைக்க உங்கள் துணையுடன் அனுசரித்து செல்ல வேண்டும்.

பயணத்தின் போது பண இழப்புகள் நேரலாம். எனவே கவனமாக இருக்க வேண்டும்.

கால் வலியால் அவதிப்பட நேரலாம். தியானம் அல்லது யோகா மேற்கொள்வது நல்லது.




இன்று உங்களுக்கு உற்சாகமான மகிழ்சிகரமான நாள். இன்றைய தினத்தை கொண்டாடி மகிழ்வீர்கள். இது உங்களுக்கு மிகுந்த திருப்தி அளிக்கும். உங்கள் விருப்பங்களை திருப்திகரமாக நிறைவேற்றும் நாள்.

பணியில் அதிக வாய்ப்புகள் காணப்படுகின்றன. நீங்கள் திருப்தியாக உணர்வீர்கள். இன்று கிடைக்கும் புதிய வாய்ப்புகள் உங்களுக்கு உற்சாகத்தை அளிக்கும்.

உங்களின் கருத்துக்களை உங்கள் துணையுடன் மகிழ்ச்சியாக பகிர்ந்துகொள்வீர்கள். இதனால் ஒருவரையொருவர் நன்கு புரிந்துகொள்வீர்கள்.

நிதியைப் பொறுத்தவரை இன்று திருப்திகரமாக இருக்கும். இன்று நீங்கள் பணம் சேமிப்பீர்கள். உங்கள் சேமிக்கும் ஆற்றல் அதிகரிக்கும். உங்களை வருத்திக்கொள்ளாமல் இருந்தால் இன்று சிறந்த ஆரோக்கியம் காணப்படும்.




இன்றைய நாளை முன்கூட்டியே திட்டமிட்டு அதன்படி நடந்து கொள்ள வேண்டும். முக்கியமான முடிவுகளை இன்று எடுப்பதை தவிர்க்கவும். அதனால் சில பிரச்சினைகள் ஏற்படும். எனவே சிறிது கவனமுடன் இருக்க வேண்டும்.

இன்று சாதகமான பலன்களைப் பெற அதிக முயற்சிகள் எடுக்க வேண்டும். இன்று சிறப்பான நாளாக அமையாது. இன்று பணிச்சுமை காணப்படும்.

நீங்கள் பொறுமை இழந்து காணப்படுவீர்கள். இதனை உங்கள் துணையிடம் வெளிபடுத்துவீர்கள். இன்று பொறுமையாக இருக்க வேண்டியது அவசியம்.

இன்று பணபுழக்கம் போதுமானதாக இருக்காது. தேவையற்ற செலவினங்கள் அதிகமாக இருக்கும்.

முதுகு மற்றும் மூட்டுக்களில் விறைப்பு காணப்படும். உடற்பயிற்சி மற்றும் தியானம் மேற்கொள்வது நல்லது.




இன்று உங்களுக்கு சாதகமான நாள் அல்ல. பலன்கள் தாமதமாகக் கிடைக்கும். அதிகம் எதிர்பார்க்காதீர்கள். பிரார்த்தனையில் உங்களை ஈடுபடுத்திக் கொள்வது உங்களுக்கு ஆறுதலை அளிக்கும்.

இன்று பணிச்சுமை அதிகமாக காணப்படும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும். உங்கள் பணிகளை சிறப்பாக திட்டமிடுங்கள்.

உங்கள் மனதில் காணப்படும் பதட்டத்தை உங்கள் துணையிடம் வெளிபடுத்துவீர்கள். இதனை தவிர்த்தல் நலம். உங்களை அமைதியாக வைத்திருங்கள்.

உங்கள் மதிப்பு மிக்க உடைமைகளை பத்திரமாக வையுங்கள். இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. நீங்கள் பணத்தை இழக்க நேரலாம்.

தோல் சம்பந்தமான பிரச்சினைகள் ஏற்படலாம். எண்ணெய் பதார்த்தங்களை தவிர்ப்பது நல்லது.




இன்று உங்களிடம் பாதுகாப்பின்மை உணர்வு காணப்படும். இன்று அவ்வளவு சிறப்பான நாளாக அமையாது. உங்கள் வளர்ச்சி குறித்து கவலைப்படுவீர்கள். இன்று அதிர்ஷ்டம் குறைந்து காணப்படும்.

இன்று பணியில் உங்களிடம் பொறுமை காணப்படாது. இதனால் தவறுகள் நேரலாம். மனதை நிலைப்படுத்தி பணியாற்ற வேண்டும்.

உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும். நீங்கள் அமைதியாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்க வேண்டும்.

இன்று பண இழப்பு காணப்படுகின்றது. நீங்கள் கடன் வாங்க நேரலாம். சிறந்த முறையில் பணத்தை நிர்வகிக்க முயலுங்கள். தொண்டை எரிச்சல் மற்றும் தலைவலி ஏற்பட வாய்ப்பு உள்ளது.




இன்று உங்களின் சொந்த முயற்சி மூலம் வளர்ச்சி காணப்படுகின்றது. வெற்றி நிச்சயம்.

பணியிடத்தில் பதவி உயர்வுக்கான வாய்ப்பு உள்ளது. உங்கள் கடின உழைப்பு பாராட்டைப் பெறும். உங்கள் பணியின் தரத்தை மேம்படுத்துவீர்கள்.

உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை கொண்டிருப்பீர்கள். இதனால் உங்கள் அன்பு அதிகரிக்கும்.

நிதிநிலைமை சிறப்பாக காணப்படுகின்றது. இன்று பணத்தை சுதந்திரமாக கையாள்வீர்கள்.

இன்று உங்களிடம் காணப்படும் மகிழ்ச்சி காரணமாக சிறந்த ஆரோக்கியம் காணப்படும்.




இன்று சுறுசுறுப்பான மன நிலையில் காணப்படுவீர்கள். மிகுந்த ஆற்றலுடன் காணப்படுவீர்கள். சுய வளர்ச்சிப் பாதையில் செல்வீர்கள். உங்களிடம் மாற்றம் உணர்வீர்கள். இது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

பணியில் உங்கள் திறமைகளை வெளிப்படுத்துவீர்கள். இதற்கு உங்களிடம் காணப்படும் தன்னம்பிக்கையே காரணம்.

உங்கள் துணையுடன் சுமுகமாகப் பழகுவீர்கள். உங்கள் அனுசரனையான அணுகுமுறை அவரை மகிழ்விக்கும். உறவில் பிணைப்பு வலுப்படும்.

நிதிநிலைமை முன்னேற்றகரமாக காணப்படும். உங்கள் சேமிப்பை அதிகரிப்பீர்கள்.

உங்களிடம் காணப்படும் தைரியம் மற்றும் உறுதி காரணமாக நீங்கள் மிகவும் ஆரோக்கியமாக இருப்பீர்கள்.




உங்களால் இன்று மகிழ்ச்சியை தக்க வைத்துக்கொள்ள முடியாது. வெளியிடங்களுக்கு செல்வதன் மூலம் மனதுக்கு ஆறுதல் கிடைக்கும்.

பணியில் வெற்றி காண மிகுந்த முயற்சி எடுக்க வேண்டும். எனவே சுமுகமாக பணிகள் நடைபெற திட்டமிட்டு பணியாற்ற வேண்டும்.

உங்கள் துணையுடன் குறைந்த நேரத்தை செலவு செய்வீர்கள். உறவில் மகிழ்ச்சி நிலவ எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

இன்று வரவும் செலவும் இணைந்து காணப்படும். உங்கள் பணத்தை இன்று முறையாக பயன்படுத்த இயலாது.

இன்று ஆரோக்கியம் சுமாராக காணப்படும். சரியான நேரத்தில் உணவு உண்ண வேண்டும். அதிகமான நீரைப் பருக வேண்டும்.

# இன்றைய ராசி பலன்கள் - 23.02.2024




இன்று சிறிது சோம்பலுடன் காணப்படுவீர்கள். மனதில் குழப்பம் காணப்படும். இன்றைய நாளை உங்களுக்கு சாதகமாக்கிக் கொள்ள இத்தகைய உணர்வுகளை தவிர்த்தல் நலம்.

இன்று முழுவதும் பணியில் முழுகியிருப்பீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் அங்கீகாரம் கிடைக்காது. இன்று உங்கள் இருவரிடையே காணப்படும் மனக் குழப்பம் காரணமாக உங்கள் துணையுடன் சுமுகமான உறவு காணப்படாது. எனவே குழப்பத்தை தவிர்த்து தெளிவான எண்ணங்களை வளர்த்துக்கொள்ள வேண்டும்.

பணத்தை கவனமாகக் கையாள வேண்டும். அஜாக்கிரதை காரணமாக பணத்தை இழக்க நேரலாம்.

கண்களில் பாதிப்பு ஏற்பட வாய்ப்புள்ளதால் கவனமாக இருக்க வேண்டும்.




இன்று சிறந்த அதிர்ஷ்டம் காணப்படும். உங்கள் இலக்குகளை எளிதில் அடைவீர்கள். உங்கள் அணுகுமுறையில் வளைந்து கொடுக்கும் போக்கு காணப்படும்.

உங்கள் சக பணியாளர்கள் மற்றும் மேலதிகாரிகளுடன் விருந்தில் கலந்து கொள்வீர்கள். அவர்களுடன் வெளியிடங்களுக்கு செல்வீர்கள்.

இன்று உங்கள் துணையிடம் காதல் உணர்வை வெளிபடுத்துவீர்கள். இதனால் உங்கள் பிரியமானவரிடத்தில் அன்பு அதிகரிக்கும்.

இன்று பணவரவிற்கான வாய்ப்பு உள்ளது. பங்கு வர்த்தகத்தின் மூலம் பணம் சம்பாதிப்பீர்கள்.

இன்று அதிக ஆற்றலுடனும் உறுதியுடனும் காணப்படுவீர்கள். ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று மகிழ்ச்சியான நாள். இன்றைய செயல்களின் விளைவுகள் உங்களுக்கு சாதகமாக அமையும். கடினமான பணிகளையும் இன்று எளிதாகச் செய்வீர்கள். உங்கள் விருப்பங்கள் நிறைவேறுவதற்கான வாய்ப்பு உள்ளது.

மேலதிகாரிகளின் பாராட்டுகள் குவிந்து கொண்டே இருக்கும். பணிகளை குறித்த நேரத்துக்கு முன்பே தரமாக முடித்துத் தருவீர்கள்.

உங்கள் உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிபடுத்துவீர்கள்.இது நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்தும்.

எதிர்பாராத பண வரவுகள் காணப்படும். நீங்கள் ஆச்சரியப்படும் அளவில் உங்கள் வருமானம் அதிகரிக்கும். மகிழ்ச்சி நிலவும்.




உங்களின் சொந்த முயற்சி மூலம் இன்று நீங்கள் அபாரமான வளர்ச்சி காண்பீர்கள்.

பணியிடத்தில் பதவி உயர்வு கிடைக்கலாம். இன்று அர்ப்பணிப்புடன் பணி புரிவீர்கள்.

உங்கள் துணையுடன் நல்லுறவு கொண்டிருப்பீர்கள். உங்கள் அணுகுமுறை மூலம் அவரின் இதயத்தில் இடம் பிடிப்பீர்கள்.

நிதி நிலைமையில் முன்னேற்றம் கானப்படும். வங்கியிருப்பை நல்ல முறையில் பராமரிப்பீர்கள். திருப்தி நிலவும்.

சாதரணமான அணுகுமுறை மூலம் ஆற்றல் அதிகரிக்கும். அதன் காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

